964
964

உ குகமயம்.

தேவமாநகர் விஸ்வப்ரம்ம குலதிலக

**K. S.** சுப்பையாப் பத்தரவர்கள் இயற்றிய

# பக்தியானந்தமெனும்

# பஜனாமிர்தகானம்.



இஃது

நயினார்கோவில் சங்கீத சாஹித்ய வித்வான்

...த்திவேலாச்சாரியார்

...ல் அச்சிடப்பெற்றது

Q2:417
N34.
172187

உ

குகமயம்.

தேவமாநகர் விஸ்வப்ரம்ம குலதிலக

வித்வபூஷண

K. S. சுப்பையாப் பத்தரவர்கள்

இயற்றிய

# பக்தியானந்தமெனும்

# பஜனாமிர்த கானம்.

(முதற்பாகம்.)

இஃது

நயினார்கோவில் சங்கீத சாஹித்ய வித்வான்

R. V. சத்திவேலாச்சாரியாரால்

பார்வையிட்டு

மதுரை செண்ட்ரல்மார்க்கட் தெரு,

மனோன்மணி விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர்டு]  1934  [காபிரைட்.

உ

குகமயம்

# முகவுரை.

---

புகழோங்கிய நமது தென்பாண்டிநாட்டில் எண்ணிறந்த பல பஜனைப்பாடல்க ளுலவுகின்றன. அவைகளிற் சில கலையென்பதற்கு காலை யென்றும் விடை யென்பதற்கு வீடையென்றும் கமலை யென்பதற்குக் காமாலை யென்றும் ஓசையழகு குன்றி விகாரப்பட்டு தன்மை, முன்னிலை படர்க்கை யின்றியுமிருக்கின்றன.

அவைபோன்று நவையுறாது பல்லவிஇரசமுஞ் சொற்பொருட் சுவையுமமைந்து பூரணச்சந்திரன் போன்றுதயமான **பக்தியானந்த பஜனாமிர்தகான** மென்னும் பெயரிய இந்நூல்செய்தார் தேவகோட்டை உயர்திரு. விஸ்வப்பிரம்ம வம்ச **K. S. சுப்பய்யாபத்தராவர்**

இதிற்கனராக தாளங்களோடு கூடிய பக்திச்சுவை ததும்பும் கீர்த்தனப்பாக்க ளடங்கியுள்ளன. பாடுவோர்க்குச் சிரமமின்றி யுத்ஸாகந் தரத்தக்கவாறொவ்வொரு கீர்த்தனத்திற்கும் வர்ணமெட்டுங் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நூலின் பெயருக்கேற்ப இதிலடங்கிய பாக்கள் பஜனையிற் பாடும் பக்தர்களுக்குப் பக்தியைப் பெருக்கி ஆனந்தபரவசமடையச் செய்வன வென்பதி லையமில்லை.

ஜபகோடி குணம் த்யானம் த்யானகோடி குணோலா

லயகோடி குணம் கானம் காணாத் பரதரம் நஹி.

என்றவாறு கானம் பக்தர்களின் மனதை யொருவழிப்படுத்தி முக்தி யின்பத்திற்குப் பரம சாதனமா யமைந்துள்ளது. பகுத்தறிவற்ற ஜீவர்களையும் துன்புற்றோரையும் பித்தரையுங்கூட கானம் பரவச மாக்குமென்றா லதன்பெருமை அளவிடற்கரிதன்றோ.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழென மூவகையாக நமது தமிழ்மொழி விளங்கி வருகிறது. இதில் இயற்றமிழ் ஒன்றே ஆதரிக்கப்பட்டு ஏனைய யிரண்டும் மருகிப்போக அதன் வளர்ச்சி நாளடைவிற் குன்றிவரத் தொடங்கிய விக்காலத்திதுபோன்ற தமிழ் நூல்கள் நவநவமாக விருத்தியாகி வருவது நமது பாஷையி னபி விர்த்திக் கறிகுறியாயுள்ளது.

இத்தகைய நூல்கள் மென்மேலும் பெருகி நந்தாய்மொழி முன்னைய நிலையடைந்து பொலிவுற்று விளங்க இறைவனை யென்றும் ப்ரார்த்திக்கின்றேன்.

தமிழன்பன்,
மருதஞ்சிவகுருநாதன்,
நயினார்கோவில்.

# சாற்றுக்கவிகள்.

நயினார்கோவில் சங்கீத சாஹித்ய வித்வானும்
இந்நூற் பரிசோதகருமான பிர்ம்மஸ்ரீ
**வி. சத்திவேலாச்சாரியாரால்**
இயற்றிய
சாற்றுப்பாக்கள்

---

வெண்பா.

பக்தியா னந்தப் பஜனுமிர் தக்கான
யுக்திமிகும் சொற்பொருளை யோசித்தாற் —சக்திவரம்
பெற்றகவிக் கம்பனது பிள்ளையிடஞ் சுப்பையவேள்
கற்ற தமிழாக லாம்.

---

அறுசீர் விருத்தம்.

கதிசிறந்த பக்தியினு னந்தபஜ னுமிருத
கானங் கண்டு
மதிசிறந்த மறையவனும் மறையவனே மலைமகளும்
மலைத்தா ளாகப்
பதிசிறந்த வானகரும் வானகரு வாரிதனைப்
பாடிக் கேட்கத்
துதிசிறந்த வீணையனும் வீணையனென் றுற்பெருமை
சொல்வ தென்னே.

ஆசிரிய வாழ்த்துப்பா.

ஜெயவிராட் விஸ்வகுல திலககும ரப்பக்தர்
செய்தவத் துற்ற புதல்வன்
தேவமா நகர்மீது நவரெத்ன வ்யாபார
செல்வம் பொருந்து குணவான்
மயபரா பரவஸ்தை யனுதினமு மறவாத
மகிமைப்ர தாபசீலன்
மரகத சொரூபதிரு மாவின் மருகன் குகன்
மலரடி துதித்த னோர்க்குச்
சுயபிரார்த் தனையான பக்தியா னந்தந்
துலங்குபஜ னமிர்த கானச்
சொற்சுவை பொருட்சுவை யருட்சுவை நிறைந்திடச்
சொன்ன சுப்பையா வெனுந்
தயைதரா தர நிபுண மதியூகி கீதந்
தனைப்படித் தோர் கேட்பவர்
தகமை பெருகும் பரம விகபரமுறாங் கிரம
சகலவரமும் பெறுவரே

பரிமணங்குடி ஸ்ரீபரமகுருஸ்வாமிகள் சைவ சன்மார்க்க
சங்கத்தினரும்
செட்டிமார்நாட்டுச்சிவநேசத்திருக்கூட்டத்திலொருவருமாகிய
**வித்வான், முத்துப்பிள்ளையவர்களியற்றிய**
அறுசீராசிரியம்.

பூவிரிதண் பொழிற்றேவை விசுவகுல திலகமெனப்
பொருந்தி நான்கு
பாவுமுணர் சுபகுமரச் சுப்பையாப் பக்தனன்பாற்
பாடினன் கற்
றேவர்களு மெழிதுணருஞ் செந்தமிழ்த்தோத் திரமாக
விதயம் பொங்குந்
தேவபக்தி யானந்த பஜனமிர்தக் கானந்
தேர்ந்து தானே.

மதுரை தமிழ் வித்வான்

மு. திருமலைமுத்துப்பிள்ளை அவர்கள் இயற்றிய

சாற்றுப்பா.

செயம்பெருகு தேவநகர் தனிலெஞ் ஞான்றுந்
திகழ்ந்துறையுங் குமரரெனும் பூமான் செய்த
நயம்பெருகு தவத்துதித்த சுப்பை யாவேள்
நாவலவன் திருமுருகன் திருமான் மீது
சுயம் பஜனு மிர்தகான கீர்த்த னைப்பா
சொற்றவொரு நூலதனைப் பார்ப்போர் கேட்போர்
இயம்புதற் கொண் ணுவிதுபோற் பார்த்ததில்லை
யென்றுமன மகிழ்வுகொள்வ ரிகத்திற்றானே

சிவகங்கை சமஸ்தான வித்வானும்

ராஜா ஹிஸ் ஐஸ்கூல் தமிழ்த்தலைமைப் பண்டிதராயிருந்த

மு. ப. கணபதியாபிள்ளை அவர்களின் கனிஷ்டன்

## மு. ப. முத்துக் கருப்பபிள்ளை

அவர்கள் இயற்றிய

சாற்று வெண்பா.

பக்தியானந்த பஜனு மிருத கானம்
புக்திவள ரப்பாவாற் போதித்தான்—முக்திதரும்
கத்தாரும் பண்ணைகள்சூழ் நாட்டிலுயர் தேவிநகர்
வித்துவசுப் பையனெனும் வேள்.

---

மதுரைத் தாலூகா

சிறுவாலை ஜமீன் அம்பலத்தாடி

வீ. எஸ். வீரணக்கோனார் என்ற

வித்வத் பஹதூர்

## வெ. சி. வீரநாதக் கோவலனார்

அவர்கள் இயற்றிய

சாற்று வெண்பா.

பத்தர்சூழ் தேவநகர் பண்புமய சுப்பையாப்
பத்தர்சொற் கானம் பகர்வோரின்—பத்தருள்சேர்
மாலோன் பாப்பிரம மாதேவ சேய்சத்தி
வேலோன் பதம்பெறுவார் மெய்.

உ

குகமயம்.

# பக்தியானந்தமெனும்

# பஜனாமிர்த கானம்.

## தந்திமுகவன் பூஜிதம்.

வெண்பா.

மின்னுமணி மாமகுடம் வேழமுகத் தைந்துகரம்
பன்னுமணி யேகதந்தப் பானரஸங்—துன்னதரச்
செந்தா மரைப்பாத சித்தி விக்கி னேஸ்வரனே
வந்தா தரித்தருள் செய் வாய்

மனஸ ஹரக தேமோஸ்ரீ யென்ற மெட்டு,

இராகம்-அம்ஸத்வனி-தாளம்-ரூபகம்.

பல்லவி

ஆதிமூலப் பொருளே மத
யானைமா முக வைங் கரனே ஆதி

அநுபல்லவி.

ஜோதிஸ்வரூபா ப்ரணவ வாச
ஷோடஸோப சார பூஜித ஆதி

சரணம்,

பாதி மதி நதி யணிந் தோன் பாலா
பக்தருக் கருள் செய் வித்வா நுகூலா
நீதியன்பு மெய்க் காருண்ய லோலா
நிரா மயனே நித்ய சுசீ லா
நீத சுப்பையா கீதம்ஸத் வனி
நேர்த்தி பெற வென் னேரிற் க்ருபை புரி ஆதி

## சிட்டாஸ்வரம்.

சநிபகரிச காரி சாரி கரி சநி
பநிப்ப சக்கரிச ரிகப நிசரி சநி
சநி சரி சநி பநி சசி சநி பநி சரி கரி சநி
கர் ரிஸ் சநி ரிஸ்சந்நிப சந்நி ப்பநி (ஆதி)

## காயத்திரி பாத வணக்கம்.

### வெண்பா.

பத்மா சனவாணி பண்ணிசைந்த யாழ்ப்பாணி
வித்வா நசுவிப்ரம்மா வின்ராணி—முத்தமிழைப்
பாடும் படித்ராணி பாலிப்பாய் கல்யாணி
நீடுங் கமழ் மலர் வே ணி

---

### செந்தூரிலங்குந் தெய்வமே என்ற மெட்டு

இராகம்-மத்தியாவதி-தாளம் - ஆதி

பல்லவி

தாயே சரஸ்வதி நீயே யிது சமய முதவி செயுந் (தா)

அநுபல்லவி

சேயே யென் னுவிருந்து சே
சித்தி ரமிகுத்தி லங்கும்
முத்த மிழை விர்த்தி செய்யுந் (தா)

சரணம்.

பாதார விந்த சேவையே பக்தருக் கென்றும்
ஆதார மானதே வையே யனுதினமும்
வேதா மூதா மெஞ் ஞான
விற்பன மும் நற் பலனு
மற் புத மகத் வம ருள் (தா)

காருண் யமான தேவியே காவியங் கந்தா
காக்குந் தமிழ்ச் சஞ்சீவியே கதியே நீயே
பாரும் சுப்பையா கீதம் (பா)
பண்ணிசை நிறைந் துபாரிற்
கெண்ணிய முண்டாக கேரிற் (கா)

## ஜோதிஸ்வரூப துதி.

மீ வேல்லகுண தோஷ மேமி யென்ற மெட்டு.

இராகம் - காப்பி - தாளம் - ஜம்பை

பல்லவி.

நீ சொல்ல வரவேணுஞ் சாமி யுபதேசம் (நீ)

அநுபல்லவி.

மாசில்லா மொழி கூறி
மகிமை பெறவே நேரில் (நீ)

சரணம்.

வேதா வே தாந்த குணா
விமல க்ருபா கிரணா
நாதா நித்யா கல் யாணா
ரமணா கமா புரா ணா
ஆதார னே கீர் வாணா
அத் வீ தனே சுகுணா
பாதார சேவை பூஷணா
பாத்ய சுப்பைய் யாவுங்காணா (நீ)

## காங்கேயன் பாத வணக்கம்.

காமி சத்தியபாமா கதவை திறவாய் யென்ற மெட்டு.

இராகம் கமாசு தாளம் - ஆதி

பல்லவி.

வானோ ரெல்லாம் போற்றும்
மயூர வாகனா வாகனா வாகனா (வா)

அநுபல்லவி.

தேனபிஷேகா குகா தேவி தெய்வானை மோகா
தீன தயாளா ஷண்முகா ஷ. ஷ. ஷ. (வா)

சரணம்.

கான சங்கீத ப்ரியா கார்த்தி கேயா காங்கேயா
த்யான மந்த்ராதி சகாயா ச. ச. ச. (வா)

சேனு பதிப் பேர் கொண்ட ஜென்ம சாபல்யா தொண்டர்
ஞானோ பதேச காரணா கா கா கா (வா)

நேமா னுகூல போதா நேசன் சுப்பையா வேதா
பாமாலை சூடுஞ் சோபிதா சோ சோ சோ (வா)

---

## ஷண்முகானந்த கீதம்.

சாதர முககுகா யென்ற - மெட்டு

இராகம் தோடி தாளம் ஆதி

பல்லவி.

வா வரத ஷண்முகா மாமயி லேறி (வா)

அநுபல்லவி.

தாவி வருமோர் சிகா மணிதுலங்க
தாமத மின்ன முஞ் செய்யாதின்ப வரந்தர (வா)

சரணம்.

தேவி மனமகிழும் செல்வக் குமரா
திருச் செந்தூரா திருவருள் செய் (தே)

கூவியழைத் தேனுனை யிதுவே தருணங் கூவி
கோருஞ் சுப்பையாதுதி யாருங் கொண்டாடநேரில் (வா)

## சுவாமிமலைக் கந்தன் துதி.

சனித்தோடி யென்ற - மெட்டு.

இராகம் அரிகாம்போதி தாளம் ஆதி

பல்லவி.

தணி காசல மூலா தாரவி சாலா (தணி)

அநுபல்லவி.

கெணி தவபூஜி கிருபை ப்ரபல நேசி
கீதப்ரியா வுல்லாசி பாதந் தந்தாள் விஸ்வாசி (த)

சரணம்.

சரவண நாதனே தமிழருள் போதனே
சகல ஜீவ காருண்ய சம்ப்ரம நீ தனே
பரமோப தேசனும் நீ பக்த ரக்ஷகனும் நீ
பாலன் சுப்பையாவின் பா மாலைப்ர காசனும்நீ (த)

## கார்த்திகன் பாத வணக்கம்.

சிவதீக்ஷபரோ யென்ற மெட்டு.

இராகம்-குறிஞ்சி-தாளம்-ஆதி

பல்லவி

சிவ சாக்ஷாத்கா தேவ சுதா
தீன தயாளு நாயகா தாயகா (சிவ)

அநுபல்லவி

நவவீரர் சூழ்ந்திடும் ராஜரீக கெம்பீரா
நடன மயூர தேசிகா நேசிகா (சிவ)

சரணம்

விரதசஷ்டி யாதாரா வீர சோழியக் காரா
விகட மூஷிகன் சோதரா நீதரா (சிவ)
க்ரணமா மணி ஸோபிதா கீத சுப்பையாப்ரீதா
ப்ரணவ சொரூபா நீ சதா பூஜிதா (சிவ)

## குக பூஜிதம்

தவப்பாலகா யென்ற மெட்டு
இராகம் தோடி தாளம் ஆதி

பல்லவி

வருவாய் குகா வன்னமா மயூரா

அநுபல்லவி

தருவாயுன் காக்ஷி கதியே கடாக்ஷி சிவ
சாமி செல்வ க்ஷேமி செந்தூர்ப் பூமி-கொண்ட ஞாக்ஷி வரு.

சரணம்

செங் கதிர் வேல் நாதா சேவலா விநோதா
சீதளா பொற் பாதா திவ்ய நீபப் ரீதா
சங்கரோப தேசா ஷண்முகா ப்பிரகாசா நீ
சந்ததமு மெந்தனை யுவக்த முரு கேசா (வரு)

கீர்த்தி மேவு மெய்யா கெண்யனே சுப்பையா
கீதராஜ துய்யா க்ருபை கூரு மையா
கார்த்திகா முத் தையா கௌரியின் தனையா நான்
காண வன்புதோண வின்பம் பூணுங் குமரையா (வரு)

விருத்தம்

நந்தனைக் கண்ணப்பனைக் கதிசேர்த்தவ நன்மதலை
வந்தனைக்கன்பர் குழாஞ்சென்று சூழும் வளரொளிமுத்
தந்தனை வெண்டிரைக் கையாற் சிதருவர் சார்ந்த செந்திற்
கந்தனைக்காணுத கண்ணென்ன கண்ணுலகத்தவரே

## தோகைமயில் வாகன் துதி.

குமரவேளை நிமிஷமேனு மென்ற மெட்டு
இராகம் சங்கராபரணம் தாளம் ரூபகம்

பல்லவி

சமயமே மயிலேறியே வருவாய் ஓம்
சரவணபவ சிவகுருபர குக (சம)

அநுபல்லவி

அமையு மென்றனை யண்டித் துதித்தேனே
ஆதரித் தருள் செய்வடி வேலனே
ஆதிசத்தியாளருமைப் பாலனே ஆறுமாமுக சீலனே (சம)

சரணம்

அமரர்க் கதிபா அற்புதநாதா
அயனைச் சிறையிலடைத்த வேதா
அகஸ்திய முனிக் கன்பான போதா
அசுர சம்ஹார வோங்கார மேதா (சம)

சம்ப்ரம ரஞ்சித தேனுபி ஷேகா
சாதுசாம்ராஜ்ய பழநிவை போகா
நம்பு சுப்பையா நறுந்தமிழ் ப்ரீதா
நாடிய சங்கரா பரண கீதா (ச)

---

## சோமசுந்தரேசன் துதி.

காமசுந்தராங்கி யென்ற மெட்டு

இராகம் தன்யாசி தாளம் ரூபகம்

பல்லவி.

சோமசுந்தரா வுனதிரு
தூயபாதந் தனைவிரும்பியே யனுதினங் கருதினேன் (சோ)

அநுபல்லவி,

சேமலாப சேஷா பரண
தேசிகானந்தா மெய்ப்பூரண
சிந்தைமகிழ்ந்திட வந்தர
விந்தப்பத தெரிசனந்தந்திட (சோ)

சரணம்.

சாமவேத கானந் தேடும்
சாதுக்கள் சற்சனர்கள்கூடும்
சங்கம்பெறும் பரங் கிரியுற்ற
தங்கம்பிரணவ குமரனைப்பெற்ற (சோ)

சோபன சுந்தரி சமேதா
ஸோபிதாகெண் யாவி னேதா
ஜோதிச்சுடரொளி பொருள் பெற
ப்ரீதி சுப்பையா தமிழ்க் கருள்தர (சோ)

## மீனாக்ஷி அம்பிகையின் மேல்

சிங்காரி வோய்யாரி என்ற மெட்டு.

இராகம் தோடி தாளம் ஆதி

பல்லவி.

அம்பாள் ஸ்ரீமீனம்பாள் உந்த
னடியிணை யைப்பணிந்தென்
முடிமிசை யணிந்தே (னம்பாள்)

அநுபல்லவி சந்தம்.

ஆவல்கொண்ட தறிந்து
சேவைதந்தருள் புரிவா (யம்பா)
அருளே தெருளே பொருளே பெறவே
அறிவே நிறைவே தாவே வரவே (யம்பா)
அத்தனை நத்திய நர்த்தனவனிதா
அற்புத தற்பர பொற்பதிபுனிதா (யம்பா)

சரணம்.

அம்பிகையுன் சம்ப்ரமமே யெம்பிரானறியப் போமோ
அண்ட பஹிரண்டமுத லொன்றதாய் நிறைந்த பொரு

ளாதி பரஞ்சுடரின்ஜோதியானந்த மனு நீதி
அகில மெல்லாம் ப்ரீதி அன்பர்கள் போற்றும்
அந்தரி சுந்தரி யாதரி மாதரி ஹரிஹரி சோதரி யன்பு சவுந்தரி
அழகுமதுராபுரிக் கமர்ந்த கிரிடாதாரி
அன்பன் சுப்பையா துதிக்கருளுங் கிர்பாகரி (யம்பா)

ஆசிரிய விருத்தம்.

ஜெகஜோதி மயமான மதுரா புரிக்கரசி
செல்விமீ னுக்ஷி யுமையே
ஜெயஜெயென வநுதினமு முனதுசன் னிதிவாயில்
தேவதுந் துமியி னேசை
சகலபு வனசரா சரங்களுங் கண்டதி
சயித்திடக் கங் காதரன்
சந்த்ரசே கரனேடு நடமாடிடுங்கவுரி
சற்குண கரி முத்தமிழ்த்
தகமைபெற யிகபரசு கானந்த மகிமையே
தந்துதவு வாய் முராஹரி
தாமோ தரன்றுளப மாலின்ப சோதரி
தந்தவக் ரன் கொடூர
மகிஷாசு ரனைவென்ற வீரப்ர தாபியே
மனதுவைத் திது சமயமே
மந்த்ரசுப் பைய்யனென் செந்தமிழ்ப் பாமாலை
வந்தணிந் திடு தேவியே.

---

வானவர் போற்றுஞ் செந்தூர்வாழ்- என்றமெட்டு
இராகம்-ஹிந்துஸ்தான்-ப்யாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

பார்வதி பரம கௌமாரி யுன்பாதம்
பணிந்தே னன் கோரி (பார்)

அநுபல்லவி

நேர்துதி பாரலங்காரி ருத்ராக்ஷ
நிமலி கெம்பீரி (பார்)

தொஹையரா.

மகிஷாதி சூரவீரப்ர பல மர்த்தனி
மரகத சொரூப ரமணி
மதுரா புரிக்கரசி மணிமகுட முடிகொண்ட
வரதமீனாக்ஷி யமணி

சரணத்தொடர்

நாடிய திருவிளையாடல் அறுபத்து
நாலும் புரி கூடல்
நீடிய மகிமையே தேடல் நலமென
நிகழ்த்துதே பாடல் (பார்)

தொஹையரா.

அண்டபகி ரண்டமுத லொன்றாய் நிறைந்திடும்
ஆதிமத் யாந்த ரஹிதே
தொண்டர்கள் சதாவுனது தண்டாமரைப் பதந்
தோத்திரஞ் செய்கு வரதே

சரணத்தொடர்

சூக்ஷ்மா மோக்ஷவழி காட்டும் கடாக்ஷ
சொருப நிலை நாட்டும்
தீக்ஷண்யத் திருவருளையூட்டும் சுப்பையா
திவ்ய தமிழ் சூட்டும் (பார்)

---

## த்வாத சாந்தம்பாள் துதி.

கார்த்திகா நித்யகல்யாண - யென்ற மெட்டு

இராகம்-பியாக்—தாளம்-சாப்பு

பல்லவி

அம்பிகா நித்யகல்யாணி
அண்டினேன் பத்மதாள் பேணி
சம்ப்ரம மதுரைவாழ் ராணி
செந்தமிழ்த் தந்தருள் த்ராணி (அ)

தொஹையரா.

அண்டபஹி ரண்டமு மொன்ருய் நிறைந்திடும்
ஆதியே ஜோதி மய மே
தொண்டரா னந்தமுறு தண்டாம ரைப்பதத்
தோத்திரந் தருமே ஜெயமே

பாட்டு.

தந்தைதாய் தெய்வம் நீ தானே
சற்கு ருவான செந் தேனே
மந்த் ரோப தேசி யென் றேனே
கொண்டாடும் மைந்த னும் யானே (அ)

தொஹையரா.

வேதவே தாந்தையே மெய்ஞான தீபமே
வித்வசித் தாந்த வுரு வே
மாதவ சகோதரி மகிமை ப்ரதாபியே
மரகத சொரூப திருவே

பாட்டு

அந்தரர் போற்றலங் காரி
அத்வீத நடன சிங் காரி
சுந்தர மூர்த்தியின் பாரி
சுப்பையா தோத்ர கெம்பீரி (அ)

## நடராஜமூர்த்தியின் த்யானம்.

தெரிசனங்கண்டாற் கென்ற மெட்டு.

இராகம் காம்போதி தாளம் ஜம்பை

பல்லவி.

அரஹரா சாம்பசிவா ஆனந்த மெய்த் தேகா
அம்பலத்தி லாடு கின்ற அம்பிகை யோர்பாகா (அ)
மரகத சொரூபியுடன் வாதாடும் பாதா
மானொருகை மழுவொருகை வைத்திடும் விநோதா (அ)
தாரணி யெல்லாம் விரும்புஞ் சாம்ராஜ்ய போதா
சதுர்வேதன் தாளமிடத் தாண்டவ ப்ரைக்யாதா (அ)
அரவணி ஜடாமகுட வாதியந்த மூவா
அன்பன் சுப்பையாசெந் தமிழாதரிக்குந் தேவா (அ)

---

## திங்களணியீசன் துதி.

பரலோகசா-யென்ற மெட்டு

இராகம் பூரிகல்யாணி தாளம் ஆதி

பல்லவி.

சந்த்ர சேகரா சம்போ கெங்காதர (ச)

அநுபல்லவி.

அந்தரிசதா ஆனந்தாதி வேதா
ஆடியதில்லை யம்பலவி நோதா (ச)

சரணம்.

இமையாதி யோர் இறைஞ்சும் பொற்பாதா
ஏகநாயகா ஜகத் பூஜிதா
சமயோஜிதா சர்வ காரணா
சற்குண லயா சுப்பையா சங்கீத (சந்)

## கௌமாரி பாதவணக்கம்.

சிங்காரலகரி-என்ற மெட்டு.

இராகம் நீலாம்பரி தாளம் ஆதி

பல்லவி.

சுந்தரரூப வதனி சுபஸோபித சுமுக நீ

அநுபல்லவி.

சந்த்ரோதய விம்பா மேனி
சரதாமணி சதமெனத் தொனி
சங்கீ தாங்க கவுமாரி ஜடாதரி பூஜித

(ஸ்வரம்)

சாரி சநிப சநிபம கம பா கம
பசநிப கம பநி
சரிசநி சநிபம பநிபம பம கம
ரிகம ரிகரி பாமா கா மப நி
சசநிப நிநிபம பபமக மமகச
மகபம நிப சநிபமகம பநிதநி
பதபப மகசா பமகச நிபமகச
ரிசநிபம காம பநி சநிபமகச (சுந்)

சரணம்.

அங்கமாதி ஹிர்தயங் கமழ் தருசாதே
அதிஸோபித கெண்யத

லங்க்ருத பரிமளலஸித கானர ஸிதே
மங்கள சுபவரதே மிர்து பாஷித
கங்கணம்ணி சுப்பையா வித்வ போஷித (சுங்)

## தில்லைநடராஜன் துதி.

வனகோப விக்னேச-யென்ற மெட்டு.

இராகம் பியாகடை தாளம் ரூபகம்

பல்லவி.

நடராஜசர் வேசா வுனை
நம்பினேன் வந்தாளு மீசா (ந)

அநுபல்லவி

திடமேவிய தில்லை க்ஷேத்திர
தேவா தேவா மகானு பாவா (ந)

சரணம்

பூரணகிர்பையின் பொருளே வேதம்
போற்றிய பேரின்ப வருளே
தாரணி யோர்புகழ் சற்குணசுப்பையா
த்யான கான சங்கி தாப்ரீத (ந)

சுரஜதி

ரிகமப கம பதநிநி தகஜெணுமாபதா பா பா பா
ரிகம பமா ரிகமப கமபத நிநி தகஜெணு மாபதா
தீம்தக தாதக ததிமித தக சா சா சா
சநித கும்த தகிடஜம்த தத்தித தோம் நம
தாகிட கிடதக ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோம்
ததிங்கிணத்தோ மென (ந)

## நாகலிங்க பூஜிதகானம்.

ரேகுநாயகா-யென்ற மெட்டு.

இராகம் அம்ஸத்வனி தாளம் ஆதி

பல்லவி.

கருணுகரா திரு நாக நாதா
காதல் சௌந்தர நாயகி சமேதா (கரு)

அநுபல்லவி.

கிருபாகரா கெங்கை சேகரா
கீர்த்திமேவுந் தேவா கெண்யதாப்ர தாபா (கரு)

சரணம்.

சேதுகாவலவ ராஜ பூஜிதமே
க்ஷேத்திரமருதூர் மூர்த்தியாந்தமே
சாது சற்குண தனயன் சுப்பையா
சாற்றுமம் ஸத்வனி சங்கீதப்ரீயா (கரு)

நாராயணு நந்தா-யென்ற மெட்டு.

இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி.

சாமி சத்தி வேலா சௌபாக்ய வரந்தா சிவ சாமி

அநுபல்லவி.

க்ஷேமித் தருள்ப்ரீதா தெய்வீக சோபிதா சிவ சாமி

சரணம்.

பூமிபுகழ்நாதா மெய்ப் போதா விநோதா குண
நேமிதுதி கீதா வெனை நீங்காவரந் தா சிவ சாமி
காமியருள்பாலா திருக் கார்த்திகை லோலா
நாமிசுப்பையா நூலென் னுளுங்கு ஜாலா சிவ சாமி

## ஷண்முகவேட் பூஜிதகீதம்.

மணம் புரிந்திட வேணுமென்ற மெட்டு.

இராகம் பெலகரி தாளம் ஆதி.

பல்லவி.

அநுதினமறவேனே அன்பாகத்தானே (அநு)

அநுபல்லவி.

ஆதரித்திடு மென்னை ஆறுமுக வேலனே (அநு)

சரணம்

மணமுங் குணமுமுள்ள வள்ளி மணவாளனே
மாதவரோதும் நன்னீத துணை யாளனே

முடுகு.

மகத்துவமிகுத்திடு சுகத்தினை வகித்திடு
இகத்துணைநிறைத்திடு குகத்தெய்வமெவுனை நா (அநு)

பன்னக சயனதேக பரந்தாமன் மருகனே
பார்வதி பாலனே பாரோர் புகழ் சீலனே

முடுகு.

பற்பலவற்புத விற்பனதற்பர
நற்பொருளைப்பெறச் செப்பிய சுப்பையனுனை (அநு)

விருத்தம்.

கங்கைக் கினிய மகனேகு காகுறக் கன்னிதெய்வ
மங்கைக் கினிய மணவாள னேதிரு மாலருமைத்
தங்கைக் கினிய குமார மனத்துறுஞ் சஞ்சலந்தீர்
செங்கைக் கினிய வயிலா பரங்கிரித் தேசிகனே.

—:oOo:—

சரவணபவனே-யென்ற மெட்டு

இராகம் பூரிகல்யாணி தாளம் ஆதி

பல்லவி.

பழமுதிர் சோலையிற் றுலங்கிடும்
பரமகுரு பரனே சிவ (பழ)

அநுபல்லவி.

கழனிகள் சூழ்ந்திடுங் கமழாசல மூர்த்தியே
கலாபமயூர மேறிவர வேண்டும் சரவணபவகுக சிவ (பழ)

சரணம்.

வேதாவையே தெண்டித்த வீரப்ரதாபனே
விமல நேத்திரத்தாலே விளங்குஞ் சொரூபனே
பாதார விந்தந்தனைப் பணிந்தேன் சுப்பையா நினை
பாதுகாத்தருள் செய்வாய்—
பக்தர்கள் தினந்துதிக்கும் வஜ்ரதண்டாயுதபாணி சிவ (பழ)

--;oOo:—

தண்டபாணிப் பூஜிதம்.

நீபக்தி பாக்யசுதா-யென்ற மெட்டு.

இராகம் ஸ்ரீரஞ்சனி தாளம் ரூபகம்

பல்லவி.

நீயே யென் தெய்வ மணி
நிஜதேசிக தண்ட பாணி (நீ)

அநுபல்லவி.

சேயே யுந்தன் பாதகெதி
தெரிகுவாயே யிதுவேதகி (நீ)

சரணம்.

வேதாந்த விமல விநோதா
வேதனைச்சிறை விதித்த கெண்யதா
நாதாவுனை நம்பும் சுப்பையா
நண்பனுக் கருள் தந்திடு மெய்யா (நீ)

—:oOo:—

## கார்த்திகை குமாரன் வணக்கம்.

பஜன சேயவே ஓராமா யென்ற மெட்டு.

இராகம் கேதாரம் தாளம் ரூபகம்.

பல்லவி.

செந்தில் வாழும் வேலா வுன்
சேவைதந் தருள் செய் சீலா (செ)

அநுபல்லவி.

அந்தரர் கொண்டாடுந் தீரா
ஆறுமாமுகா கெம் பீ—ரா— (செ)

சரணம்.

தஞ்ச மென்றோரைத் தற்காக்கும் நாதா
சாதுமாதவ போதும் பொற் பாதா
பஞ்சாமிர்த ரஞ்சிதப் ரீதா
பாலன் சுப்பையா பாடுஞ் சங் கீதா (செ)

—:oOo:—

## கந்தனிருபாத வணக்கம்.

கோபாலாகண்பார் யென்ற மெட்டு.

இராகம் ஹமீர்கல்யாணி தாளம் ரூபகம்

பல்லவி.

கந்தா வந்தருள் தா திருக்
கார்த்திகேய மூர்த்தியே செந்தூர்க் (கந்)

அநுபல்லவி.

பந்தபாச வினைகள்தீரப் பாலனைக் கண்பாரும் வீர
சந்த்ரசேகரன் குமார சாதுசங்க னேமயூர (கந்)

சரணம்.

செந்தினைக்கு மாரிநாதா தேவயானையாள் சமேதா
தந்திசோதரா மெய்ப்போதா தாதுசேரும் பாத வேதா (கந்)
அந்தரர் கொண்டாடும் வேலா ஆறுமாமுகாவிசாலா
மைந்தனும் சுப்பையாநூலா மாதவாதேவாநுகூலா (கந்)

—:oOo:—

குமரன்மயூர கிரிக்கு

அய்யாபழநிமலை வேலா யென்ற மெட்டு.

இராகம் சகாநு தாளம் ஆதி

பல்லவி.

குன்றுக்குடியில் வள ரீசா வுனைக்
கோருமடியர்க் குப தேசா (குன்)

அநுபல்லவி.

என்றேபுகழுங் கும ரேசா மன
மிரங்கிவந் தருளும் விஸ்வாசா (குன்)

சரணம்.

அண்டாண்ட ரும்பணியுந்தீரா ஜோதி
யறுமுகவரத வொய்யாரா
தண்டாயுத மணி கெம்பீரா வுக்ர
தாருக சூரசம் மா ரா (குன்)
அன்றுடமுங் காவடிப்பூஜா அரு
ளானந்தந்தரு முருகேசா
பண்டார வேடக் கதிரேசா குண
பாலன் சுப்பையா தமிழ்நேசா (குன்)

## தோத்ரானந்தப் பாசுரம்

சேசிஞதில்லாமறசிஓ யென்ற மெட்டு.

இராகம் தோடி தாளம் ஆதி.

பல்லவி.

தேசிகானந்த திருச்செந்திலா மா
தேவ தேவா (தே)

அநுபல்லவி

காசினிக் கோர் ஜீவ
கா. ருண்ய சா க ர (தே)

சரணம்.

கார்த்தி கேய ஞானமூர்த்தி
கருணலய நே ர்த்தி
கீர்த்தி பூமான் சுப்பையா
கீர் த்த ன லங் கா ரனே (தே)

## கழுகுமலைக்கந்தன் வணக்கம்

திருப்புகழேங்கு முழங்குங்குகா யென்றமெட்டு

இராகம் பைரவி தாளம் ஆதி.

பல்லவி.

திருக்கழுக் குன்று திடங்கொண்டவா
தேவியோர் வாவினேர்
மேவியருள் சொருபனே (திரு)

அநுபல்லவி.

வருக்க முகத்தோனே வருந்தியழைத்தேனே
வாவா மெய்த்தேவா யேன்
தாவா வருள்புரிந்திடுந் (திரு)

சரணம்.

சமபமிது தானே தயவுசெய்வாய் கோனே
தாசன் சுப்பையாவின்
நேசத்துதிக் கனுக்ரஹ (திரு)

## சிகிவாகனத்தன் துதி.

மயில்வாகன மதில்வா யென்றமெட்டு.

இராகம்—தாளம். ஆதி.

பல்லவி

வருவாய் வரந்தருவாய் திரு
மகள் நாயகன் மகிழுஞ்சற்குருபரயிதுததி(வரு)

அநுபல்லவி.

கிருபாகரநிதியே வுயர்
கெண்ணிய புண்ணிய ரெத்னக்
க்ரீட சேகரா நீ மகிழ் தர (வரு)

சரணம்.

குருவாயரற் குபதேசித்த
குமரசகாய சரவணபவனே
மூருகா வெனவுனை யே யனுதினம் முரு
முகந்து புகழ்ந்து சுப்பை
யாவின் கீத மோத மயின்மிசை (வரு)

## சதமெனவே நம்பியகீதம்

தயவில்லாத தேன்னவஞ்சம்-யென்ற மெட்டு

இராகம்-சுருட்டி-தாளம் - ஆதி

பல்லவி.

கருணை செய்குவையுன் தஞ்சம் திருக்
கார்த்திகேயா நெஞ்சங் கொஞ்சமேனுங் (கரு)

அநுபல்லவி.

தருணமீதி லென்னவஞ்சம்
க்ஷணந்தனிற்குணம் பொருந்திடுமுந்தன் (கரு)

சரணம்.

பாருங்கண் ணிதுதகி பரம தயாளா
பன்னிருபுயவிரு பாவை மணவா
சீருறவருள் புரிவாயே கென்ய
செந்தமிழ்த்துதி மைந்தன் சுப்பையா
தினந்தினந் தனம் பெறக்கடவுளே (கரு)

## கந்தப்பன் சந்தப் பாசுரம்

கண்டாலானந்தமே யென்றமெட்டு.

இராகம் பைரவி தாளம் ரூபகம்.

பல்லவி.

வந்தாலானந்தமே நேரினில். (வந்)

அநுபல்லவிச்சந்தம்

வன்னமயில் ரஞ்சித முடன்
அன்னை வள்ளிகுஞ்சரி யுடன் (வந்)

வந்தனம் புரிந்தேனுந்தன்
பொன் பெறும் பதம் பொருந்த (வந்)

வழுவாதருள் பொருளை மகா
கழுகாசல முருகா குகா (வந்)

வரமெனக்கருள் தர விதா ததி
சரவண பவ குரு பர நிதி (வந்)

வக்ரசூரர்களை வென்ற வேலனே
சக்ராயுதன் தங்கை தந்தபாலனே (வந்)

மந்த்ரமனோகர மாகனுபாவனே
மாதவரோதமகிமைப்ரதா பனே (வந்)

சரணம்.

தந்தைக்குபதேசஞ் சாற்றியபோதா
தாரணி போற்றிய ஷண்முக நாதா
விந்தைவிவேக விச்சித்ரா பொற்பாதா
வேதவேதாந்த விநோத ப்ரைக்யாதா

முடுகு

விண்ணவருன்னடி தேடிடுங்
கெண்ணியனே யெனை நாடிட
பண்ணிசை பாடவுஞ் சூடிட
நண்ணுவையானுங் கொண்டாடிட (வந்)

கந்தா கடம்பா கருணைப்ரகாசா
காருண்யனே திருக்கார்த்திகை நேசா
சந்ததி சுப்பையா சங்கீத வாசா
சாமிநாதாக்ருபை தாருஞ்சர்வேசா

முடுக்கு

தங்குமலங்கிர்த கெங்கையும்
பொங்கரவங்கள் துலங்கிய
சங்கரமைந்த சுமங்கள
மெங்கும் நிறைந்து முழங்கிட (வந்)

## சுப்ரமண்யசுவாமி துதி.

ஸ்ரீ ராம சீதா லங்கா யென்றமெட்டு

இராகம் ஆபோகி தாளம் ஆதி

பல்லவி.

ஸ்ரீ-சுப்ரமண்யா செந்தூ
ராண்டதேவ புண்யா ஸோபித (ஸ்ரீ)

அநுபல்லவி.

பூசுராதி முனிவோர் துதிசெய்
புண்ய சேவை தந்தாள் ஸோபித (ஸ்ரீ)

சரணம்

கருணாகரா வீரா சிங்காரா
கார்த்திகேய தீரா ஸோபித
திருமாலின் மருகா சுப்பையா
த்யானகீத முருகா ஸோபித (ஸ்ரீ)

## நடனமயில் வாகனன் த்தியானம்

எதிரேவரவேண்டும்-மேன்ற மேட்டு
இராகம் கமாஸ் தாளம்.

பல்லவி.

முருகா வரந்தருவாய் நான்முறையுரை குருவாய் (முரு)

அநுபல்லவி.

திருக்கார்த்திகை வரதா அதி
ஜெய நயமிகுவிர தா (திரு)
தினமுங்கிருபை செய்
மனமங்கள மெய்த் (திரு)
ஜெனன மர ணபிணியை
யொழித் தருள் புரி (திரு)
தேனுடம்பணி தேவ னின்பணி (திரு)
சேவலா காவலா
சேவலா காவலா சேவடிபூஜித (முருகா)

சரணம்.

ஆரவாரசுரவீர ராதியர்கள் பீறிடாதறுக
வேரறுத்து ஜெய மணியுஞ்சத்திவேலா வானவர்
பணியுமுத்தி மூலா அகில வேதா
மகிமை நாதா உனதுசெயல்
யாருங்காண வெழிதா
ஆத்ம தேவா பாத்யஜீவா மகிழிதய
அன்புசேருமென் ப்ரபந்தா
தென்பு கூருமுன் ப்ரியந்தா
ஆதிசுப்பையா கீத நீதிதப்பாதிங்கோத (முருகா

## சிவாசலவேளின் பூஜிதம்.

அடைக்கலமே - யென்ற மெட்டு

இராகம் - ஆரபி - தாளம் - ஆதி

### பல்லவி.

பரங்கிரி யாண்டருள் தேவா
பரமசேயா கருணா சரவணபவ திருப் (பரங்)

### அநுபல்லவி.

பிரணவசொருப ப்ரகாச தெய்வீகா
பேரின்பப்பொருளே பெம்மானே வைபோகதிருப் (பர)

### சரணம்,

அரஹர சிவ சிவ குருபர யோகா
ஆகமவேத புராணமெய் த்யாகா
மரகதமயிலழகா வள்ளி மோகா
மாக்ஷிமைபொருந்தும் கடாக்ஷமுருகா திருப் (பரங்)

அண்டர்துயரந் தீர்த்த வதிக பக்ஷகனே
ஆபத்பாந்தவனே யனுதாரக்ஷ கனே
தொண்டன்சுப்பையா கீத துதிக்கருள்குகனே
சோலைமலையில்வாழுஞ் சுகிர்த ஷண்முகனே (பரங்)

---

### விருத்தம்.

செஞ்சிலம்பாடச் சதங்கை யொலிக்கத்திகழ்மலர்ப்பா
தஞ்சதமென்னத் தினநம்பு மென்னை நீதானறியாய்
அஞ்ச லென்றெந்த னருகாக நின்றுன் னடிமைமனச்
சஞ்சலந் தீர்க்கவருவாய்பரங் கிரிச்சண்முக னே

## கடலூர்க் குமாரன் வணக்கம்.

இந்தவேளை வந்துகாவும்-யென்ற மெட்டு.

இராகம். காம்போதி - தாளம் ஆதி

பல்லவி.

செந்தில் மேவுங் கந்த நாதா
தேசிகானந்தா சிவனருள் குமரனே (செ)

அநுபல்லவி.

தந்திமா முகன்றனக் கிளைய வா
சாமிநேமி பூமிபுகழ் புரிந்திட விதுததி (செ)

சரணம்.

சந்தனமும் பன்னீர் தேனபி ஷேகா
சாதுசதானந்த வேதவி வேகா
மந்த்ரசடாக்ஷர ஞான மெய்த் தேகா
மாமயூர க்ஷேமதிருவருள் தருஞ்ஜெய (செ)

அந்தரர்சோக மகற்றிய நாதா
ஆதிமத்யாந்தரஹித ப்ரக்யாதா
சுந்தரரூப சுப்பையா சொற் ப்ரீதா
தோத்ரா க்ஷேத்ரா நேத்ரா னந்த சரவணபவ (செ)

## மயிலிடத்திற் சொல்லுவது.

முருகனிட மென்முறை யென்ற மெட்டு.

இராகம் அரிகாம்போதி - தாளம் ரூபகம்

பல்லவி.

கந்தனேரி லென்கவலை சொல் மயிலே
கனிந் துனது மனந் தனிலே
நினைந் தெனதுதுதியை யிதுவேதநி (க)

கஷ்டப்பட முடியாதினி
நிஷ்டைப் பொருள் தாவரு வாயெனக் (க)
காரணத் தெய்வீக சித்த
பூரணத் தயாளம் வைத்த சிவ (க)
கார்த்தி கேய மூர்த்தியின் தீபார்த்தனையை (க)
நேர்த்தியுடன் பூர்த்திசெய்து பார்த்தேனெனச் செந்தூர்க் (க)

அநுபல்லவி.

அந்தரதேவருக் காதார நாதன்
அருணகிரியாற் கனுக்ரஹபோதன்
செந் தமிழ்நற் கீரன்தெரிசனப்பாதன்
சேவலன்காக்ஷியை யடைந்திட
ஆவலென்மாக்ஷிமைக் குடன்படச் சொந்தக் (க)

சரணம்.

மந்த்ரமனோகர வாக்ய விசாலன்
மாச்சர்யந்தீர்க் குங்கடாக்ஷ குஜாலன்
சந்த்ரஜடாதரன் தந்தருள்பாலன்
சாதுமெய்யோது தபோபலன்
மாதிருபோர்திகழ் காவலன்
வஸ்தன் சித்தன் கர்த்தன் மகிழ்ந்தே-புகழ்ந்தே
வந்திடச்செய்செந் தமிழ்ச் சுப்பையாநேரில்
தந்திடச்செய்சிந்தைவர மிந்தப்பா ரிற் சொந்தக் (க)

## பராசத்திவேற் பிரதாபம்.

பக்தி கொண்டாடுவோம் - யென்ற மெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ஆதி.

பல்லவி

சத்திவேலாயுதா ஆதி சற்குருபரா (சத்)

அடாபல்லவிச் சந்தம்

சதுர்மாமறையோர் தொழும் நாயக
சரண்யாகருணாகர வருள் தாயக (சத்)
சஞ்சலந்தவிரும் வஞ்சியுங் குறமின்
குஞ்சரிச் சகிதங் கொஞ்சி வருக (சத்)
சரம்பொருந்துறங் கொண்ட சூரர்கள்
சிரங்கரங்குலைந் தறுந்திட விடு (சத்)
தாரணையாகம சாதுமகா பரி
பூரணயோக புராதன நெறி (சத்)
சதமெனவுனதிரு பதமல ரது துதி
விதமதுரித நய முதவிடு நிமலி (சத்)

தொகையறா

சீர்மேவுதென் பரங்கிரி யிலுறை கந்தனே
தேனபிஷேக குகனே
தேவர்சிறைமீட்டியே யிந்த்ரன் வளர் யானையை
திருமணமுடித்த தகனே
நீர்மேவுமதி ஜடாமகுடநிமலற் கன்று
நீதியுப தேச முருகா
நிகரற்ற தாமோதரன் மருகனே யென்மேல்
நெஞ்சமேனின்ன முருகா
தார்மேவு சரவணையி லறுவரமுதம் பருகு
தாமரைத்தொட்டில்வாசா
சாலோக சாமீப சாரூப சாயுஜ்யந்
தருசடாக்ஷர வுலாசா
மார்மேவுகச்சணியு மகராசி சுகவாசி
மாமதுரைராணி சேயா
மயில்வாகனத்தில் வந்திது சமயமே பெற்ற
மைந்தனுக்கருள்சகாயா

பாட்டு.

பக்தபரிபாலா பாரோற்கனுகூலா
சுத்தமுத்தமிழ்வித்வ
சுப்பையா சாற்றுங்கீத

சுமுக சுமங்களஷண்முகலங்ருத
மகிமை துலங்கிய மந்தரமிலங்கிய
ஜோதிச்சுடரொளி கெதி
யாதிப்பரவெளி நிதி
ப்ரீதி ப்ரணவ பதி (சத்)

## கங்கவரை நாதன் வணக்கம்

வேலுமயிற் சேவலுடன்-யென்ற மெட்டு

இராகம் - பிலகரி - தாளம் - ரூபகம்

பல்லவி.

வேள்விமலை மீதினிலே வீற்றிருக்கும் வேலவனே

அநுபல்லவி.

வேகமயிலேறியேன்முன் பாகவருவாய் தவனே (வே)
வேடக்குறவஞ்சி யோடத்ததிகெஞ்சி
தேடத்தினையிற் கொண்டாடநடித்த குகா (வே)
விண்ணவர்துதி யண்ணலேயுன
தெண்ணமெதுவோ திண்ணமறிகிலேன் (வே)
விர்த்தித்திடு முத்திக் கொரு
வித்துத்தம வஸ்த்துப்பொருளதுதரு (வே)

சரணம்.

கேள்வி முறையோற் கிரங்கும்
கீர்த்தியுள்ள மாமணியே
கௌரியருள் பாலகனே
கெண்ணிய சிகாமணியே

நாளுமுனையே தொழுது
நாடினேன் குணமணியே
நம்புசுப்பையா து திக்கு
அன்புகொண்டருள் பேணியே (வே)

## பழநிக் குமார துதிப்பா

பூங்காவினோதமே-யென்ற மெட்டு

இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி.

வன்ன மயி லேறி
வருவாய் முருகா யிதுவேதருதி (வ)

அநுபல்லவி.

என்னை ரக்ஷித்தருளென்
னன்னை வள்ளி குஞ்சரியுடன் (வ)
இன்பமே முழங்கிடவுன்
அன்புமே வழங்கிட யெவ் (வ)
எதுவாது செய்வதா
காது பாது காத்திட (வ)
எத்திக்குஞ் சித்திக்கு மனுதினம்
விர்த்திக்கும் வெற்றிக்கும் மனமகிழ் (வ)
இஷ்டக்குறமகள் நத்தியணைத்திடும்
நிஷ்டைச்சரவண முத்திகொடுத்திடும் (வ)
இகமெய்ப்ரபை ஜொலிமகிமையின்சுதந்திர
சுகசற்குண வழி சுருதியின் பதந் தர (வ)
இந்த்ரப்பதிபுகழ் கந்தப்பனேயர
விந்தப்பதமருள் தந்தைக்குருபரா (வ)

சரணம்

உன்னை மறவாதிருக்க
உத்தம தத்துவ வித்வ மகத்துவம்
தன்னையருள் செய்வதுக்தன்
சக்தியெனத் தெரிந்தித்த திகோரினேன்

ஜாலமிகுசூரர்குலகாலா முன்பு
காலனையுதைத்தவரன்பாலா திவ்ய
மூலமந்திரம் பகர்ந்த சீலா மணக்
கோலனே சங்கிதற்கனுகூலா

கார்த்திகைக் குமாரா
கோர்த்தகடம் பாரா
பார்த்தருள் கெம் பீரா துதி
பக்தன்சுப்பையா முத்தமிழ்க்கருள்தா (வ)

---

## பரங்கிரியான் பாததுதிப்பா.

தசரதராஜ-யென்ற மெட்டு

இராகம் - காப்பி - தாளம் - ஆதி

திருப்பரங்கிரி முருகேசா குமரேசா
துதிநேசா சுகவாசா

அநுபல்லவி.

விருப்பமுடனே வுன்னை வேண்டி னேனுனே
வேகமயூர மேறிவருவாய் சீ மானே
திருப்பத தெரிசனம்பெற வெண்ணி னேனே
தேவசேனுபதியே தீரா சுகு மாரா
வுப காரா ஓங்காரா (தி)

சரணம்.

குருவாயரனுக் குபதேசித்த நாதா
கோருமடியார்க்கருள்கூறும் விநோதா
அருணகிரி தமிழ்க்கு அனுக்ரஹப்ரீதா
ஆறுமா முகவலங்காரா கடம்பாரா
செந்திபூரா வதிகாரா (தி)

கருணாநிதியேஜீவகாருண்ய த்யாகா
கார்த்திகேயா தெய்வானை கமழ் வள்ளிமோகா
தருணோபகாரஞ் செய்யத் தகுந்த விவேகா
தாசன்சுப்பையா கீதவரதா சஷ்டிவிரதா
கலாபரதா தகுஞ்சோபிதா (தி)

## கங்கைமைந்தன் பாதவணக்கம்.

தருமோடிமானே - யென்ற மெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ரூபகம்

பல்லவி.

நாடிவருவாய் நம்பினேனுன்னை
நாரணன்மருகா நடமிடுமயின்மிசை (நா)

அநுபல்லவி.

நீடியவாழ்வு மெய் நீங்காதசெல்வமும்
நிலைக்கவருள் கொடுத்துதவ (நா)

சரணம்.

பாடித்துதித் துன்தன்பாதம் பணிந்தேனே
பார்த்திப சாரதி மாலயனு முன்னே
தேடியுங்காணாத சேவடிக் கந்தனே
சிந்தைமகிழ் தந்துபுகழ்
சொந்தமிகுங் கந்தப்பனே ததி (நா)

பாண்டியனீன்றவள் பாலகுக நாதா
பக்தர்க்கனுகூல நித்யானந்த போதா
வேண்டினேன் சுப்பையா வித்வசதுர்வேதா
விபரம்பெற சுபசம்ப்ரம
அபரஞ்சிதஜெப மந்த்ரமே தர (நா)

## சரவணபவன் பூஜிதம்.

தர்ம்மசம்வர்த்தனி - யென்ற மெட்டு.
இராகம் ப்யாகடை தாளம் சாப்பு

பல்லவி.

அரஹரா சிவ குமாமுருகையா பன்னிருகையா
அருள்புரிய யிதுசமயந் தானையா அன்பானதப்பா (அ)

அநுபல்லவி.

மரகத சொருபரமண சிகிமகிபா கடாக்ஷபீய
வரவே நினதருள் பெறவேயருள்நிருபா மங்களக்ருபா(அ)

சரணம்

தந்தை தாய்குரு தெய்வமும் நீயே தண்டபாணியே
தரும நெறிமுறை யுதவிபுரிவாயே சங்கரன் சேயே (அ)
எந்தநாளுமுன் சொந்தமே தேடி பக்திகொண்டாடி
எற்றினே னிருபாதமலர் சூடி சுப்பையா பாடி (அ)

(ஸ்வரம்)

சரிசநி தப மபத மாகரி
சாரி சமகரி காமமபதநி
சா சரி சமகரி கரிச நிதப
ரிநி: தப மக ச கா ரிகம

## நவரெத்ன வேலன் த்யானம்.

காதலின் பாக்ய-மென்ற மெட்டு
இராகம் - சாமா - தாளம் - ஆதி.

பல்லவி.

ஜோதிப்ரகாசா சொர்னவேலாயுதா
சோமசுந்தரேசன் பாலா அநுகூலா (ஜோ)

அநுபல்லவி.

நீதிப்ரணவ வேதா நித்யகல்யாணப்ரீதா (ஜோ)

சரணம்

தாரக சூரசம் மார கெம்பீரா
சகலஜீவாதார சம்ரக்ஷகனே தீரா
சமரச சாக்ஷாத் ஸ்ரீ ஷண்முகவலங்காரா (ஜோ)
ராஜராஜேஸ்வரி ரமணசுதாகரா
ஞானோப தேசவிர்த்தி லலிதகிர்பாகரா
தாசன்சுப்பையா துதி தமிழின்ப்ரபாகர (ஜே)

## க்ஷீராபிஷேகன் றுதி.

பரப்பிர்ம்ம வேலா-யென்ற மெட்டு

இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

பல்லவி.

பாலாபிஷேகா பாக்ய போகா

அநுபல்லவி.

சீலா தெய்வானை பாகா திருப்பழநித்தெய்வீகா
தேடி. ஞ னே பாடினேனே (பாலா)

சரணம்.

நீலகண்டன் பாலா நித்யமஞ லோலா
ஜாலசூரர்காலா சாக்ஷாத்வடி வேலா

முடுகு

சரவணபவ சிவ குருபரநாதா
சரண மடைந்தேனுனைச் சதமெனநீதா
இரவும் பகலுமகி ழிதைய விநோதா
இகபர மிரண்டிற்குஞ் சுகந்தரும் பாதா
ஏழைமீதிவ்வாது மேது
தீதிலாத நீதியோது தேன் (பாலா)

தொகையரா
ஜோதிப்ரகாச மெய்ச் சுந்தரசிகாமணி
சொர்ன தண்டாயுத மணி
சுத்தசைதன்யா பரப்பிர்ம்மவஸ்துவே
சுகுணசுப்பிரமாமணி

பாட்டு.

நிதி தருமுனதிரு பதமலர் தேடும்
நேர்த்தி சுப்பைய னருள்க்கிர்த்தனஞ் சூடும் (பாலா)

## ஞான சத்திவேலன்த்யானம்.

முத்துக்குமரையனே யென்ற மெட்டு

இராகம் - சங்காரபரணம் - தாளம் - ஆதி.

பல்லவி.

சத்திவடி வேலனே
முத்திதருஞ் சீலனே (சத்தி)

அநுபல்லவி.

அத்திமாமுகனைப் பத்தியேடு மனம்
வைத்தழைத்த நாதா குறமகள் க
ரத்தணைத்த பாதா ஆதி (சத்தி)

சரணம்.

எத்திசைத்துதிசெய் வித்வகர்த்தனெனு
முத்தமிழ்ச்சகாயா அகிலபரி
சுத்தகார்த்திகேயா ஆதி (சத்தி
செப்பொணுமகிமை யைப்பெறுஞ்சகல
விற்பனதி போதா புவிபுகழுஞ்
சுப்பையா சங்கீதா ஞான (சத்தி)

விருத்தம்.

குகனே சரணங் குமரா சரணங் குலிசன்மரு
மகனே சரணம் வரதா சரணம் மதியுயர் ஷண்
முகனே சரணம் முருகா சரணம் முத்தமிழ்த்தே
சிகனே சரணம் திருவே சரணநின் சேவடிக்கே

## கமழ்கடம்பன் தேனபிஷேகம்

ஆதாரமேனக்கா-ரேன்ற மெட்டு

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ஆதி

பல்லவி.

தேனபிஷேகனே திருச்செந்தூரனே
தெய்வானை மோகனே அருள்
திகழ் மதுரி தகமழ் (தே)

அநுபல்லவி.

சேனபதியனே ஜெகப்ரதாபனே
மகத்வரூபனே பரசிவனருள் முருகனே (தே)

சரணம்.

ஞானதிபதியே ரமணநிதியே
ரக்ஷியுன் கெதியே சிகி
நடமிடுவரதனே (தே)

முடுக்கு

தீனதயாபரனே திவ்யமனோகரனே
சேயன் சுப்பையா துதி நேயத்தமிழ்க்கருளுஞ்
சேந்தா வன்பரிதய
பந்தா சற்குணஞான
வேந்தா மந்த்ரோப தேச
சேவலா வுனது திருவருளதுபெற
ஆவலாகு முனதடி யவனிடம் வர

சித்தத்தெணுமிது தகுந்தசமயமே
விக்வத்ப்ரபலமு மிகுந்த குமரனே
பத்மப்பதஇகெதி யடைந்தேநறுமண (தே)

## கதிர் வேலன் கீதவணக்கம்.

தாயே நீ தயை-யென்ற மெட்டு

இராகம்-நாட்டைகுறிச்சி-தாளம்-ஆதி

பல்லவி.

வா வா வா வடி வேலனே கோரும்
வரமருள்புரியவே குண மா மயிலேறியே (வா)

அநுபல்லவி

சேவலா வுந்தன் பாத தெரிசனச்
சீர்த்தி நன்னேர்த்தி மெய்க்கீர்த்தி
மனப்பூர்த்தியே தரவெதிர் (வா)

சரணம்.

தேவபதி மகிழ் காவலனுனது
ஆவல்பெருகியே தேடினேனே
பாவலர்கள் துதி பாடுங்குணநிதி
பாங்கா கிடாங்கா நீ நீங்காதிங்
கிதுதகி யெனவெதிர் (வா)

கீர்த்திநிறை செந்தூர் மூர்த்தியானதிருக்
கார்த்திகேய வருள்ப் புரிவாயே
நேர்த்திமிகுந்துனைப் பார்த்திக்குஞ்சுப்பையா
நீதாவினோதாசங்கீதா பொற்
பாதமே தர வெதிர் (வா)

## தெய்வானை நாதன் துதி.

ஞானபண்டிதமோதிலா லென்ற மெட்டு.

இராகம்-ஹிந்துஸ்தான்-ப்யாக்-தாளம்-ஆதி

பல்லவி.

ஞானமந்த் ரோப தேசிகா
நம்பினேன் த்யாகா (ஞா)

அநுபல்லவி.

கானமா மயிலா கருணைப்ரகாச லோலா
காக்ஷிதந் தாண்டருள் சீலா கண்ய விசாலா (ஞா)

தொகையறா.

வானவர்கள் போற்றிடும் வல்லப விநோதனே
வையகம்புகழ் நீதனே
வாது செய்யாதெனைப் பாதுகாத்தருள் புரியு
மகிபனேகுக நாதனே
தீனரக்ஷகனே தினங்கெஞ்சி னேனுனைத்
செந்தாமரைப் பாதனே
ஸேஷவாகன ரூடதிருமாலின் மருகனே
சித்தாந்த வத்வீதனே.

சரணம்.

தேனபிஷேகா திருப்பரங் குன்றுயோகா
தேவ நாயகா ஷண்முகா தெய்வானை பாகா (ஞா)

தொகையறா.

வேதனைச் சிறையிட்ட வேத வேதாந்தனே
வெற்றிவேலணி வீரனே
வேடுவர்கள் காணாது வேள்விமலை வனமீது
விரிவேங்கை யுருவாரனே
ஆதாரமாய்வந்து மருணகிரி செந்தமிழ்க்
கருள்தருஞ் சிங்காரனே
ஆறுபடை வீடுதொறு மழகாக விளையாடு
மானந்த கெம்பீரனே.

பாட்டு.

ஆதிமத்யாந்தா அன்பன் சுப்பையா சொந்தா
ஆகம கீதாவரந்தா ஆசைப்ர பந்தா (ஞா)

## தண்டாயுதன் துதிக்கீதம்.

காந்தியோ பரம - என்ற மெட்டு.

இராகம்-ஹிந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

காங்கேயா வுனது கமழ்பதம் பேணி
கருதித் துதித்தேனருள் புரிதண்டபாணி
தீங்கணு காதவுன் தெரிசனத் ராணி
ஜெயந்தர வேண்டுமெந்த்ர வேதபுராணி (கா)
தேனுபிஷேகனே திகழ்வஜ்ர வேலா
திருப்பழநியில் மேவுந் தேவானு கூலா
சேனுதிபதியெனச் சிறந்திடுஞ் சீலா
ஜெகம் புகழோங்கிய தேவியின் பாலா (கா)
பாருங்கடைக் கண்ணுலே பரம்பொருள் நாதா
பாவைவள்ளி குஞ்சரி யாளின் சமேதா
கோருமடியாற்கின்ப குணந்தரும் போதா
குருமுனிக்குபதேசங் கூறும் விநோதா (கா)
தாரகசூரசம்மார கெம்பீரா
சதுர்வேதனைச்சிறையிற் ருக்கிய தீரா
ஆரம் புனைந்திடும் பன்னிருபுய வீரா
அன்பன் சுப்பையா துதிக்கருளுஞ் சிங்காரா (கா)

## வேல்மயிலோன் காங்கேயன் மேல்.

கந்தா காருண்யனே-யென்ற மெட்டு

இராகம் - தாளம் - ஆதி

பல்லவி.

கண்பார் காவலனே கழுகாசலனே
உன்தாள் போற்றினேனே உமையாள் மகனே

அநுபல்லவி.

கானமாமயில் மீதிலேறிய கண்யனே சுப்ரமண்யனே
கார்த்திகேயா கீர்த்திநேயா கருதுவோர்க்கருள்கெண்யனே

தொகையரா

காமா விகாரச்சமுத்திரந் தாண்டியக்
கரைமுத்தி சேருமுருகா
கருணைபொழியருணகிரி செந்தமிழ்க்காய்வந்த
கந்தனேமாலின் மருகா
நேமானுசாரநின்நினைவு கொண்டேனொருமை
நெஞ்சமின்னமு மேனுருகா
நீபமலர் மாலையணி சரவணபவா வள்ளி
நேசிதெய்வானை யரு கா

சரணம்

வேதநாதகீதமோதிய மெய்யனே யருள் துய்யனே
விமலபோதாகமலபாதாவேண்டினேனேசுப்பையனே (க)

## சம்மந்த மூர்த்தியின் கீதம்.

பண்டித மோத்திலால்-யென்ற மேட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கானமயிலேறுஞ் சீலா கங்கையின் பாலா
கங்கையின் பாலா வேட மங்கையின் லோலா (கா)

அநுபல்லவி.

தீனரக்ஷகா வுன்கீர்த்தி
தேனமுதமான சீர்த்தி
ஞானரசபாகத்யான ரமணியப் பூர்த்தி
ரமணியப் பூர்த்தி யருள்விமரிசை நேர்த்திக் (கா)

தொகையரா

கந்தசாமியே நினது திருவடியை யனுதினமுங்
கண்டு தெரிசிக்கவேண்டி
கனவிலுங்கருதினேன் மனதுவைத்திதுததியே
காக்ஷிதாபழநியாண்டி

சரணம்.

வானவர் கொண்டாடுந் தீரா
வள்ளி குஞ்சரிக் கொய்யாரா
சேனைக்கதி பதியேவீரா திவ்ய செந்தூரா
திவ்யசெந்தூரா தேவர் பவ்யகெம்பீரா (கா)

தொகையறு.

சாலோக சாமீப சாரூப சாயுஜ்யந்
தருமகிமை தரு நேசனே
தாசரனுகூலபூஜிதமகா தப யோக
சாம்ராஜ்ய முருகேசனே

பாட்டு.

மோனகுரு தேசிகனே
முத்தமிழ்ப்ரியா குகனே
கானசுப்பையா சங்கீத கார்த்திகேயனே
கார்த்திகேயனே த்யானப்பூர்த்தி நேயனே (கா)

## சாமிநாதன் பூஜிதம்.

தினந்துதிப்பாய் நெஞ்சே-யென்ற மெட்டு.

இராகம் - ஹிந்துஸ்தான் - காப்பி - தாளம் - ஆதி

பல்லவி.

கனவிலும் போற்றினேன் கரியமால் மருகனே
கரியமால் மருகனே கிரியில்வாழ் முருகனே (க)

அநுபல்லவி.

கனகமாமயிலேறுங் காருண்ய வேலனே
காருண்ய வேலனே கதிதருஞ் சீலனே (க)

தொகையறா

கடல்சூழுமுலகினிற் கண் கண்ட தெய்வமே
கலியுக வரப்ரசாதி
ககனதேவேந்த்ராதி பணியுமுன் பாதமே
கருதினேன் பரமஜோதி

சரணம்.

பனகாபரணன் பெற்ற பாரனுகூலனே
பாரனுகூலனே பார்வதி பா லனே (க)

தொகையறா.

பழநியம்பதியினிற் பரிபாலனஞ் செயும்
பாலதண்டாயுத கரா
பாதமேகோருமடியார்க் கருள்புரிந்திடும்
படைவீடமர்ந்த குமரா

பாட்டு

பாலன் சுப்பையா கீதப் பாசுரக் காரா
பாசுரக் காரா பாக்ய விஸ்தாரா (க)

## சத்குருவைப் பூஜித கீதம்.

மீனாக்ஷிரமணா-யென்ற மெட்டு

இராகம் தாளம்.

சாமி ஷண்முகனே மெய் சார்ந்தகுகனே குரு சாமி

அநுபல்லவி.

பூமிபுகழுஞ் சீலா புனிதகாருண்ய லோலா
பொற்பதம் நத்தினேன் தற்பரசித்தனே
விற்பன முத்தனே சொற்பரி சுத்தனே (சாமி)

சரணம்.

காமியர் மோகத்தாலே கலங்காதுன் பாகத்தாலே
காத்தருள்புரி கருணாகரனே பவந்
தீர்த்திடுங்கமழ் கிருபாகரனே குரு (சாமி)

நேமமிருந்த மெய்யா நீதசேயன் சுப்பையா
நித்தமும் பக்தியாய் நத்தினே னுத்தம
சித்த மகத்துவ வித்வமலைத் தருஞ்சாமி

## ஸ்ரீ ராமதூதன் றுதி.

ராகஸுதாரஸ-யென்ற மெட்டு

இராகம் - தாளம் - ஆதி.

பல்லவி.

ராமதூ தாததி நானுனைக்கோரி
நம்பினே னருள் மாருதி (ராம)

அநுபல்லவி.

க்ஷேமா நாம யோக நேமபூஜாபிஷேக (ராம)

சரணம்.

சதா திருவடி போற்றும்
சாஸ்வத பூஜிதா
மதுர கீதாந்த வித்வ மதிசுப்பையா மெய்த் தோத்ர (ராம)

## ஸ்ரீ ராமநாதன் றுதி.

ஆசிரிய விருத்தம்

அண்டபுவனாதிக ளடங்கலும் புகழோங்கு
மாதிமத்யாந்த ராமா
அரியகோசலை வேந்தனுக்கு மகனாக வரு
மானந்த மான ராமா
தண்டகாரண்யத்தில் நீலிதாடகையைச்
சரத்தால் மடித்த ராமா
தடமேவுகல்லையகலிகையான பெண்ணதாய்ச்
சாபந்த விர்த்த ராமா
சொண்டல் வண்ணமிதுலை வில்லொடித்துச்சீதை
குணமணஞ்செய்த ராமா
கொடிய வேதிய பரசு ராமபங்கஞ் செய்து
கோதண்ட மேந்து ராமா
மண்டல மகாமன்னர் கொண்டா டயோத்தியில்
வந்தரசு செய்த ராமா
மகரிஷிக ளாசீர்வதித்திடத் தரணிபுகழ்
மகிபதே ராமதேவே

## நளினபத ராகவ த்யானம்.

குமரா யிகபரமுத்தி - என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி.

ராமா ரவி குலாதிபதி நேமா வுனை
நமஸ்கரித்தே னருள் செய் (ரா)

அநுபல்லவி

பூமாபுக ழோங்கிய தசரதன்
புண்ணியதவத் துதித்த கெண்ணிய மகானுபாவ (ரா)

சரணம்.

எண்டிசை போற்றிடு மேக பராபரா
ஏந்திழை ஜானகிக் கினிய வசிகரா
கொண்டல் மேகவண்ணா கோகுல கெம்பீரா
கோசிகன் வேள்வியைக் காத்திடு முபகாரா
தண்ட கசுரர்களை வென்ற தீராதிதீரா
தாசன் சுப்பையா துதிக்கருளுஞ் சத்யாவதார (ரா)

ஸ்வரம்.

சா சநிதப பமகரி சநி சா தநி
சரி கம பபதநி தநிசரி கரிகம கரிசநி
பதநிச காரி சநித ரீசநிதப மபதநி (ராமா)

## ரகுபதியின் பாத தியானம்.

தினமணி வம்ஸா - என்றமெட்டு

இராகம்-அரிகாம்போதி-தாளம்-ஆதி

பல்லவி.

கனவிலுமுன்னைக் கருதினேன் தேவா (க)
கானசுகா கரண்யா (க)

அநுபல்லவி.

பனகசயானந்த பரிமளதேகனே
வனசமாதாலெக்ஷ்மி மகிழ்ந்தருமோகனே (க)

சரணம்.

சர்வஜீவகாருண்ய சப்ப்ரமனே புண்யா
சங்கு சக்ராயுதா தாமோதரா கெண்யா
பர்வதயாபரா பாபரஹிதா தரா
பாலன் சுப்பையாகீத ஞாலமெல்லாங்கொண்டாடக்(க)

## சீதாபிராமன் துணை.

மனவ்யாள கிஞ்சரா - யென்ற மெட்டு

இராகம் - தாளம் - ஆதி

பல்லவி.

ரகுநாத சுந்தரா ராமா
ரஞ்சிதா ஜானகி
கொஞ்சிய நன்நேமா (ரகு)

அநுபல்லவி.

மகுடாதிபா ஜெய சேகரா
மகத்வானு கூலா மாகிர்பா கரா (ரகு)

சரணம்.

சர்வலோகஜீவா சம்ரக்ஷகதேவா
சாமளதேகா சாராம்ஸவாகா
துருவஜோதிபே சுகிர்தா வைபோகா
சொந்தனும் சுப்பையா
செந்தமிழ்ப்ரகாச கீத (ரகு)

## தாமோதர துதி கீதம்

ஜானகி ரமணா - யென்ற மெட்டு

இராகம் - தாளம் - ரூபகம்

பல்லவி

தாரக சுகுணா தசவதார
ஸார ஸாதி சதுர்வேத பண்டிதா (தார)

அநுபல்லவி

ஆரவார வலங்கார மானதிர
அதிசூர வீர ராவணசம்ஹார (தார)

சரணம்

பக்தபரிபாலா பரமதயாளா
பங்கஜலாவண்ய ஜானகி தோளா
ரெத்னபீடமேவு நிபுணகுணாளா
நேர்த்தி சுப்பையா பாடுங்
கீர்த்தனந் தனைத்தேடுங் (தார)

## கோதண்ட ராகவனுக்கு

சஜனஜீவனா - யென்ற மெட்டு

இராகம் - கமாஸ் - தாளம் - ரூபகம்

பல்லவி.

சுகுணராகவா வித்வ
சுகிர்தமாகவா ராமா (சுகு)

அநுபல்லவி.

மகிமை சூரவா கண்டு
மகிழுஞ் சேரவா
மனமங்கள தினசம்ப்ரம வரதமாதவா ராமா (சுகு)

சரணம்.

ஜானகி சமேதப்ரீத சாஸ்வதாமித்ரா
தாரணி கொண்டாடும் ராஜ தசரதபுத்ரா
த்யானகாரகா வேதந் தேடுந்தாரகா
செப்பினே னருள்ச் சுப்பையாதமிழ்ச்
சிந்தைமகிழ் சுமுகா யோகா (சுகு)

## ஸ்ரீமந் நாராயணன் றுதி

நம்பினேரைக் கைவிடுத - யென்ற மெட்டு

இராகம் - காப்பி - தாளம் - ரூபகம்

பல்லவி.

நந்தகோபாலா சௌபாக்ய நாரணா
நாத சர்வலோகஜீவ தாரணா (ந)

அநுபல்லவி.

சுந்தரிய சோதை பாலகா
ஜோதியே சொரூப வைபோகா
பந்தபாசம் நீக்குந் தெய்வீகா
பாண்டவ சகாய நாயகா (ந)

சரணம்.

பன்னக சயன வாசா
பங்கஜ லெக்ஷ்மி யுல்லாசா
மன்னவா மகாப்ர காசா
மைந்தன் சுப்பையாமேல் விஸ்வாசா
மாதவ ஞான நிதி
மாக்ஷிமை யானபதி
தாதவிழ்பாத சம்பூரண
சங்கஞ் ஜெக மெங்கும் புகழ்
தங்குஞ் சுக ரெங்கேஸ்வரனே ஸ்ரீ (ந)

## பாலகிருஷ்ண த்யானப்பதம்

தில்லையிலாடிய தேவா - யென்ற மெட்டு

இராகம் - பூரிகல்யாணி - தாளம் - ரூபகம்

பல்லவி.

காளிங்கன் மீதாடும் பாதா யெனைக்
காத்தருள் வாய் ரெகுநாதா (கா)

அநுபல்லவி.

ஆளிங்கெனையுனை யண்டி னேன்ப்ரீதா
அரங்கமாநகர்தனி லமர்ந்தவி னோதா (கா)

சரணம்.

ஆதிமூல மெனுங் தேவா வன்று
யானையைக் காத்தசுபாவா
கோதிலாமாதவா கோகுலதேவா
குருகுலபாண்டவற் குகந்தகுணவா (கா)
அண்டமளந்திடும் பாதா வேத
மைந்துந்துதிக்கும் ப்ரைக்யாதா
தொண்டன் சுப்பையா சங்கீதா
தொம் தொம் தொம் தரிகிடதக
தளாங்கு தக ததிங்கிணத் தோமெனக் (கா)

## க்ஷீராப்தி வாசன் றுதி.

ராம நாமமே - யென்ற மெட்டு

இராகம் - கேதாரகௌளம் - தாளம் - ரூபகம்

பல்லவி.

தாரகாதிபா சௌபாக்ய
தசரதராமா தயைபுரிகேமா (தார)

அநுபல்லவி.

க்ஷீரஸாகராவதார தீனதயாளனே
திருவருள் புரிந்திடு (தார)

சரணம்.

பூலோக மந்த்ரோப தேச கெம்பீரா
பொங்கிடு சாமள தேகாலங் காரா
பாலன் சுப்பையா யின்பாவுப காரா
பார்த்திபா கிர்த்தியின்
பரிமள வரதனே (தார)

கோதண்டபாணி ஹரிக்கு க்ருபை சூடரா- யென்ற மெட்டு

இராகம் - லதாங்கி - தாளம்

பல்லவி.

ஹரிராகவா ஆபத் பாந்தவா ஸ்ரீ
அகிலாண்டகோடி ஜீவகாருண்யா (ஹரி)

அநுபல்லவி.

க்ரீடாதிபா கெண்யதாப்ரதாபா
கீர்த்திமேவுந் தேவா கேசவாதிபா (ஹரி)

சரணம்.

ஆகமவேதாந்த அத்வீதாவிநோதா
ஆனந்தா ஜானகி யணிபாக்ய நாதா
பாகசௌந்தர்யா பங்கஜாபொற்பாதா
பாலனும் சுப்பையா பக்திப்பூஜிதா ஸ்ரீ (ஹரி)

## ராமச்சந்த்ரன் தோத்திரம்

இதரதெய்வ முலவல்ல - யென்றமெட்டு
இராகம் - கேதாரகௌளம் - தாளம் - ரூபகம்

பல்லவி

இகபரசுகந்தரவருவாய் யின்பராகவா ராமா (இ)

அநுபல்லவி.

சகலகோடி ஜீவகாருண்ய
தர்ம்ம பாலகா வை போகா (இ)

சரணம்.

வேதமுனி வேள்வி யைக் காத்தராமா
விண்ணுறத்தாடகையை வென்றநாமா
மாது சிரோண்மணி ஜானகி பூமா
மைந்தன் சுப்பையா பா மாலையின்நேமா (இ)

## நாதபிர்ம்ம கீத மங்களம்

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி

பல்லவி.

நித்திய கல்யாணமங்களம் சுபமங்களம் (நி)

அநுபல்லவி.

அத்திமுக வைங்கரற்கு மாதிபராசத்தியற்கும்
முத்திபரஞ் ஜோதியான முக்கண்ணமும் மூர்த்தியற்கும் (நி)

சரணம்

சித்ரமயிலேறிவருஞ் செந்திவளர் ஷண்முகற்குந்
தித்திக்குந்தேன்மொழித்தெய்வானை வள்ளியம்மையற்கும் (நி)
சீதாசமேதனான ஸ்ரீ ராமன் சேவடிக்கும்
ஆதாரமான தூதன் அனுமந்தபூபதிக்கும் (நி)
தேசாபிமானக் கர்த்தன் திவ்வியமகான் காந்தியற்கும்
பாசமிகுந்த மாதா பாரத தேவியற்கும் (நி)
சிந்தமகிழ் நாகநாத சேதுபதியானவற்கும்
மைந்தன்சுப்பையா கீத மாபஜனைக் கோஷ்டியற்கும் (நி)

## பஜனமுத வாழிவெண்பா.

பக்தியா னந்தப் பஜன மிருதமெனுஞ்
சக்திதருங் கானமிதைத் தான்படித்தி-டக்கேட்போர்
வாழி யிதைப்பாடியவிஸ் வகுலகுல சுப்பையவேள்
வாழி யென்றும் வாழிமகிழ் வாய்

சுபம்

Printed at the
Manonmony Vilas Press, Madura.